(பதிப்புரிமையுடையது) உ



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
8 சைவசமய பாடப்பரீட்சை : 2022
தரம் எட்டு



nselva.com

கால } 1.30 மணி	இல.
புள்ளிகள் : 100	மாணவர் }

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பின்வருவனவற்றில் பஞ்ச கிரித்தியங்களில் ஒன்று எது?
   1) உணர்தல் 2) தியானித்தல் 3) மறைத்தல் 4) நிவேதித்தல்
2. பசு என்பது எதனைக் குறிக்கும்?
   1) ஆணவம் 2) கன்மம் 3) மாயை 4) ஆன்மா
3. ஆலயம் என்பது எவ் அமைப்பில் அமைக்கப்படுகிறது?
   1) பிரபஞ்சத்தின் வடிவில் 2) மனித உடலின் வடிவில்
   3) வேந்தர்களின் அரண்மனை வடிவில் 4) நாயன்மார் காட்டிய வடிவில்
4. பஞ்சாங்க நமஸ்காரத்தில் நிலத்தில் பொருந்தாத உறுப்பு எது?
   1) தலை 2) கைகள் 3) முழங்கால்கள் 4) புயங்கள்
5. குறிப்பிட்ட நற்பலன் ஒன்றை விரும்பிச் செய்யும் கிரியை எது?
   1) நித்திய கிரியை 2) நைமித்திய கிரியை
   3) காமியக் கிரியை 4) நிஷ்காமிய கிரியை
6. சிவராத்திரி எத்தனை வகைப்படும்?
   1) 3 2) 5 3) 7 4) 9
7. சிவராத்திரி காலத்தில் வழிபட்டு பெரும்பேறு பெறாதவர் யார்?
   1) ஆண்டாள் 2) இந்திரன் 3) குபேரன் 4) இராஜசேகரபாண்டியன்
8. சம்பந்தர் சிதம்பரத்தின் எல்லையை அடைந்ததும் அவரை வரவேற்றோர்.
   1) இறைவன் 2) அப்பர் சுவாமி 3) தில்லை மூவாயிரர் 4) அரச பரிவாரம்
9. எதன் மகிமையால் பாண்டிய மன்னன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மீட்டெடுக்கப்பட்டார்?
   1) திருநீறு 2) உருத்திராக்கம் 3) கங்கை நீர் 4) ஐந்தெழுத்தால்
10. கசப்பு சுவையுடைய வேப்பம் பூவையையும் இனிப்புச் சுவையுடைய கரும்பு வெல்லத்தையும் சேர்த்து பக்குவப்படுத்தி உண்ணும் பண்டிகை எது?
    1) புதுவருடப்பிறப்பு 2) தீபாவளி 3) பொங்கல் 4) ஆடிப்பிறப்பு
11. திண்ணன் என்ற பெயரையுடைய கண்ணப்ப நாயனாரின் தந்தையின் பெயர் என்ன?
    1) காடன் 2) நாணன் 3) நாகன் 4) தத்தன்
12. விசாகன் என்ற பெயரையுடைய இறைவன் யார்?
    1) விஷ்ணு 2) இந்திரன் 3) முருகன் 4) வைரவர்

13. இறைவனின் திருவிளையாடல்கள் எடுத்துக்காட்டப்படுவது எது?
1) கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள்.
2) கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்கள்.
3) சிவாச்சாரியர்கள் ஓதும் வேத மந்திரங்கள்.
4) நாம் கடைப்பிடிக்கும் விரதங்கள்.

14. மகேஸ்வர பூஜை எனப்படுவது எது?
1) வித்தியாரம்பம் 2) நாள் மங்கலம் 3) அன்னதானம் 4) புதுமனை புகுதல்

15. முன்னேசுவர ஆலயத்தின் தீர்த்தம் எது?
1) பாலாவி 2) மாயவனாறு 3) பாபநாசம் 4) மாணிக்க கங்கை

16. கற்பூரக் கந்தன் என அழைக்கப்படும் இறைவன் குடிகொண்ட ஆலயம் எது?
1) செல்வச் சந்நதி 2) நல்லூர்க் கந்தன்
3) கதிர்காமக் கந்தன் 4) மாவிட்டபுரக் கந்தன்

17. இலசவல்லிக்கு கிடைத்த சக்கரத்தின் வடிவம் எது?
1) சங்கு 2) வேல் 3) துளசி மரம் 4) மீன்

18. வேதங்களின் சாரமாக விளங்கும் உபநிடதத்தின் வேறுபெயர் என்ன?
1) வேதசிரசு 2) சங்கிதை 3) பிராமணம் 4) உபநிடதம்

19. சுந்தரரின் இல்வாழ்க்கைக்கு வேண்டிய நெல் முதலியவற்றை கொடுத்து உதவியவர் யார்?
1) இறைவன் 2) சேரமான் பெருமாள் 3) குண்டையூர் கிழார் 4) சடையப்ப வள்ளல்

20. அபிஷேகப் பிரியராக போற்றப்படுபவர் யார்?
1) விஷ்ணு 2) முருகன் 3) விநாயகர் 4) சிவபெருமான்

21. அப்பரும் சம்பந்தரும் இணைந்து திருவீழிமிழலையில் நிகழ்த்திய அற்புதம்.
1) திருக்கோயிலின் கதவு திறக்க பாடியமை
2) படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தமை
3) பாண்டியனை சைவசமயத்தை தழுவச் செய்தமை
4) முத்துக்குடை, முத்துச் சிவிகை பெற்றமை

22. உகந்தை முருகன் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?
1) அம்பாறை 2) மட்டக்களப்பு 3) திருகோணமலை 4) முல்லைத்தீவு

23. பின்வரும் கூற்றுக்களில் சிவனின் திருவிளையாடல்களில் இதிகாசக் கதையை எடுத்துக் காட்டுவது.
1) யமனை உதைத்தமை 2) மன்மதனை எரித்தமை
3) கங்கையை சடையில் தரித்தமை 4) இராவணணின் கர்வம் அடக்கியமை

24m 25m வினாவுக்கு பொருத்தமான இணைப்புகளில் சரியான விடையின் கீழ் கோடிடுக.

அ - முறிகண்டி ஆலயம்
ஆ - முன்னேஸ்வரம்
இ - கண்ணகி அம்மன்
ஈ - கதிர்காமம்
உ - காரைதீவு அம்பாறை மாவட்டம்
ஊ - முல்லைத்தீவு மாவட்டம்
எ - மொனராகலை மாவட்டம்
ஏ - சிலாபம் நகர்

24) ஆலயங்கள் பற்றிய சரியான இணைப்பு எது?
1) அ, ஊ 2) ஆ, உ 3) இ, எ 4) ஈ, ஏ

25) மாணிக்க கங்கையை தீர்த்தமாகக் கொண்ட ஆலயம் பற்றிய சரியான இணைப்பு
1) அ, உ 2) இ, ஊ 3) ஈ, எ 4) ஆ, ஏ

(25 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. திருவாசகம் செய்தருளியவர் யார்?
2. ஸ்ரீ பஞ்சாஷரத்திலே எத்தனை உரு செபித்தல் வேண்டும்?
3. தலையில் குட்டி வணங்கும் தெய்வம் யார்?
4. ஆலயத்தில் தினந்தோறும் நடைபெறும் கிரியைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
5. சிறுத்தொண்டர் வாழ்ந்த பதியை போற்றிப் பாடியவர் யார்?
6. காத்தல் தொழில் செய்யும் கடவுள் யார்?
7. நாள் மங்கலம் என்பதில் நாள் என்பது எதனைக் குறிக்கின்றது?
8. புதுவருடப் பிறப்பன்று சூரியன் எவ் இராசியில் பிரவேசிக்கின்றார்?
9. கண்ணப்ப நாயானார் எவ்வூரில் அவதரித்தார்?
10. திரு மருகலில் உறையும் இறைவன் பெயர் யாது?
11. நட்சத்திர வரிசையில் பன்னிரண்டாவது நட்சத்திரம் எது?
12. முறிகண்டி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் இரு சடங்குகளைக் குறிப்பிடுக.
13. "வாளன கண்மடவாள்" என்ற தொடர் யாரைக் குறிக்கின்றது?
14. உடப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் இசைக்கப்படும் இரு இசைக்கருவிகளின் பெயர் தருக?
15. வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மகோற்சவம் எத்தனை நாட்கள் நடைபெறும்?

(15x1=15 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "தில்லைவாழ் அந்தணர் ....."
2. "பண்ணின் நேர் மொழி ....."
3. "நீள நினைந்தடியேன் ....."
4. "காப்பதோர் வில்லும் ....."

(2x5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை எழுதுக.

1. "இன்சொலால் ஈரம் ....."
2. "இனிய உளவாக இன்னாத ....."
3. "காலத்தினால் செய்த ....."
4. "நன்றி மறப்பது ....."
5. "சமன்செய்து சீர் ....."

(5x1 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. அ. 1. கோயில் எனச் சிறப்பித்துக் கூறப்படும் தலம் எது?
அங்கே வீற்றிருக்கும் இறைவன் பெயர் என்ன?

2. வேள்வி எவ்வாறு செய்யப்படுகிறது. அதன் நோக்கம் யாது?

3. "கற்றாங்கெ ரியோம்பிக்" என்ற பாடலில் யாரை பாவங்கள் பற்றாது எனக் கூறப்பட்டுள்ளது.

(9 புள்ளிகள்**)**

2. 1. உபவாசம் என்றால் என்ன?

2. விரதம் அனுட்டிப்பதால் எமது வாழ்வில் ஏற்படும் ஆன்மீக மேம்பாடுகள் மூன்று தருக.

3. வைகாசி விசாகம் ஏன் சைவர்களாலும் பௌத்தர்களாலும் கொண்டாடப்படுகிறது?

(9 புள்ளிகள்**)**

3. 1. மஹா சிவராத்திரி எப்பொழுது நோற்கப்படுகிறது?

2. பேரிருட் காலம் என்ற உண்மையான இருட் காலத்தைக் குறிக்கும் மூன்று வேறு பெயர்கள் தருக.

3. சிவராத்திரி விரதம் மரபுகள், பலன்கள் பற்றிக் கூறும் மூன்று புராண நூல்கள் எவை?

(9 புள்ளிகள்**)**

4. 1. கதிர்காமத்தில் வருடாந்த உற்சவம் எப்பொழுது நடைபெறும்? இவ்வாலயத்தின் தீர்த்தம் எது?

2. கதிர்காமத்திற்கு பாத யாத்திரை வரும் பக்தர்கள் இடையில் தங்கிச் செல்லும் முருகன் ஆலயங்கள் இரண்டு தருக.

3. கதிர்காமத் தலத்தை சிறப்பித்து பாடியுள்ள ஈழத்துப் புலவர் யார்?
இத்தலத்தை சிறப்பித்து திருப்புகழ் பாடியவர் யார்?

(9 புள்ளிகள்**)**

5. 1. வேதங்களின் மூன்று பிரிவுகளும் எவை?

2. சுபேதாஸ்வதர உபநிடதத்தில் இறைவனைப் பற்றி முனிவர் சீடனுக்கு கூறிய இரண்டு விடயங்கள் தருக.

3. சுவேதாஸ்வதர உபநிடதத்தை விடுத்து வேறு இரு உபநிடதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(9 புள்ளிகள்**)**

6. பின்வருவனவற்றுள் ஏதேனும் மூன்றிற்குச் சிறு குறிப்பினை எழுதுக.

1. நித்திய கிரியை
2. புதுவருடப் பிறப்புப் பாரம்பரியங்கள்
3. திருநாவுக்கரசர்
4. புராணங்கள்
5. திருத் தொண்டர் தொகை
6. கண்ணப்ப நாயனார்

(9 புள்ளிகள்**)**